முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1610

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.02.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. அறமோடு தர்மபலம் கொண்ட குருவே
அரங்கனே ஆறுமுக ஞானியே
வரம் தந்து சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மாசி மாதம் 13 ம் நாள், 25.02.2024, ஞாயிற்றுக்கிழமை)

2. ஆசியதும் அரங்கனுக்கு ஆறுமுகன் யான்
அனுகூலம் நித்தம் நித்தம் செய்துவர
வாசிவென்ற ஞானிகளும் கூட
வலம் வந்து அரங்கன் குடிலை அலங்கரித்துவர

3. வருகவே வையகத்தில் அரங்கமகான் தொடர்புகொண்ட அன்பர்கள் அனைவருக்கும்
வடிவேலன் என் பரிபூரண அனுகூல ஆசி உண்டு
உண்டான தர்மபாதையை பின்பற்றி
உலகமெல்லாம் அன்னதான சேவைதனை வெகுவாக

4. உலகோர் எல்லா தடத்திலும் ஆற்றல்பட
கிளைகளாக உருவாக்கி சேவையாற்ற
அனைத்து கிளைகளிலும் ஆறுமுகன் யான்
இறங்கி அற்புதம் நடத்துவேன்

5. அன்பர்களிடையே தொண்டும் ஆர்வமும் தர்மபலமும்
அரங்கன் பெருமை கூறும் ஆற்றலும் சர்வ வல்லமையும்
ஆறுமுகன் யான் தந்து அரங்கன் வழியில்
உலகம் மாற்றம் பெற அருள்வேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–